பக்கங்கள் 17+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | மார்கழி 29 திங்கட்கிழமை 13.01.2025 | அதிர்வு 165

## அநுர இன்று சீனா பயணம்



சீனாவுக்கான நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி

04 ▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# கடத்தப்பட்ட மாணவி அம்பாறையில் மீட்பு!

## சந்தேகநபரும் கைது



(பாறூக் ஷிஹான்)

கண்டி, கெலிஓயா பிரதேசத்தில் பாத்திமா ஹமிரா என்ற 18 வயது பாடசாலை மாணவியைக் கடத்தி 50 இலட்சம் ரூபா கப்பம் கோரிய 31 வயதுடைய மொஹமட் நாசர், கடத்திய மாணவியுடன் அம்பாறையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இன்று காலை கண்டிக்குப் புறப்படவிருந்த சொகுசு பஸ்ஸில் இருந்தபோது கடத்திச் சென்ற நபரையும், மேற்படி மாணவியையும் பொலிஸார் கண்டுபிடித்தனர் என்று எமது செய்தியாளர் தெரிவித்தார்.

நேற்று இரவு அம்பாறை பகுதியில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் இருவரும் தங்கியிருந்தனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

04 ▶

## புதுக்குடியிருப்பில் மாணவி ஒருவர் துஷ்பிரயோகம்

### இதுவரை மூவர் கைது

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதியில் பாடசாலை மாணவி ஒருவரை வைத்து பாலியல் தொழில் நடத்தி வந்த குற்றச்சாட்டில் குடும்பப் பெண் ஒருவரும், அவரது கணவரும் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

04 ▶

## ரணில் - சஜித் இணைவதில் எனக்கு உடன்பாடு இல்லை

### முன்னாள் எம்.பி. ஹிருணிகா தெரிவிப்பு

"ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியுடன் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி இணைவதில் எனக்கு உடன்பாடு இல்லை. கட்சியை மறுசீரமைப்பு செய்து கட்சியின் தலைவர் தனது தவறுகளைத் திருத்திக் கொண்டால் ஐக்கிய மக்கள் சக்திக்கு எவரினதும் ஒத்துழைப்பு அவசியம் இல்லை."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் கட்சி



யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார். .

04 ▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# இடைத்தரகர்களிடமிருந்து விவசாயிகள் காப்பாற்றப்பட வேண்டும்

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு





"இடைத்தரகர்களிடமிருந்து விவசாயிகள் காப்பாற்றப்பட வேண்டும். விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான சந்தைவிலை கிடைக்க வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் பொருளாதார மத்திய நிலையங்களை இந்த ஆண்டு மீளத் திறப்பதற்கு திட்டமிட்டு வருகின்றோம்."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

மறவன்புலோ கமக்கார அமைப்பின் ஏற்பாட்டில் நெல் அறுவடை விழாவும் கமக்காரர் கௌரவிப்பு நிகழ்வும் மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் இன்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றது.

ஆளுநர் தனது பிரதம விருந்தினர் உரையில்,

"தற்போதைய காலநிலை மாற்றம் விவசாயிகளுக்கு பெரும் சவாலாக மாறியிருக்கின்றது. முன்னைய காலங்களில் நெல் அறுவடையின்போது மழை பெய்வதில்லை. ஆனால், இப்போது மழையின் பாதிப்பை நாம் எதிர்கொண்டிருக்கின்றோம். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஒரு சில நாள்களுக்குள் கடும் மழை பெய்தபோதும் தெய்வாதீனமாக மிகப் பெரியளவு நெல் அழிவு ஏற்படவில்லை. அந்த மழை மற்றும் இப்போதும் பெய்யும் மழை என்பன வற்றால் உங்களின் வயல் நிலங்கள் ஈரலிப்பாக உள்ளன. எனவே இதை விவசாயிகள் சாதகமாக பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

நெல் அறுவடை முடிந்த பின்னர் சிறுதானியங்களை பயிரிடுங்கள். அதற்கான விதைகளை வழங்குவதற்கு விவசாயத் திணைக்களம், பிரதம செயலர் ஊடாக நடவடிக்கை எடுத்துள்ளது. வடக்கின் ஏனைய 4 மாவட்டங்களும் குளத்தை நம்பி இரு போகத்தை மேற்கொள்கின்றன.

யாழ்ப்பாணத்தில் நெற்செய்கை என்பது வான்பார்த்த பயிராகவே உள்ளது. மழையை நம்பி ஒருபோகம் மாத்திரமே செய்கின்றோம். எனவே, தற்போதுள்ள காலநிலையின் மாற்றத்தைப் பயன்படுத்தி சிறுதானியப் பயிர்செய்கையில் ஈடுபட்டு விவசாயிகள் தங்கள் வருமானத்தை அதிகரித்துக் கொள்ளவேண்டும்.

எமது மண்ணின் தன்மைக்கு ஏற்பவும், எந்தப் பயிரை உற்பத்தி செய்தால் ஏற்றுமதி செய்யலாம் என்பதையும் ஆராய்ந்து அதற்கு ஏற்ப விவசாய நடவடிக்கைகளை எதிர்காலத்தில் முன்னெடுக்கவேண்டும். அதற்கு விவசாயத் திணைக்களம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இன்றைய தினம் நெல் அறுவடையுடன் சேர்த்து மூத்த விவசாயிகளை கௌரவித்திருந்தீர்கள். அதற்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

இன்று இளையோர் விவசாயத்தில் நாட்டம் குறைந்தவர்களாக மாறிவிட்டார்கள். வெளிநாட்டு மோகத்தில் அவர்கள் சிக்கியிருக்கின்றார்கள். அங்கு சென்ற பலர் இப்போது நாட்டுக்கு திரும்பிக்கொண்டிருக்கின்றார்கள். எங்கள் இளையோர்கள் விவசாயத்தில் இறங்கினால் நாம் உற்பத்தியில் சிறப்பான இடத்தைப்பெற முடியும்.

வடக்கு மாகாணத்தில் என்ன வளம் இல்லை? இலங்கையின் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது வடக்கு மாகாணத்திலுள்ளதுபோன்று வளங்கள் ஏனைய மாகாணங்களில் இல்லை. ஆனால் அதை உரிய வகையில் நாங்கள் பயன்படுத்தத் தவறியிருக்கின்றோம்.

விவசாயமும், கடற்றொழிலும் எமது மாகாணத்தின் முக்கியமான பொருளாதாதத் தூண்கள். அவை இரண்டையும் சார்ந்த தொழிற்சாலைகள் எமது பிரதேசத்தில் எதிர்காலத்தில் உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான் அந்த உற்பத்திப்பொருட்களை பெறுமதி சேர் பொருட்களாகவும் மாற்றியமைக்க முடியும்." – என்றார்.

பிரதம செயலர் இ.இளங்கோவன் தனது உரையில்,

"30 ஆண்டுகளின் பின்னர் இடம்பெற்ற நெல் அறுவடை விழாவை பாராட்டியதுடன் நகரமயமாதல் நிகழும் இந்தச் சூழலிலும் மறவன்புலோவில் கிராமத்தின் வாசம் வீசுகின்றது." – என்றார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், யாழ். மாவட்ட செயலர் ம.பிரதீபன், வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி சுகந்தினி செந்தில்குமரன், கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் திருமதி தெய்வநாயகி பிரணவன் ஆகியோரும், கௌரவ விருந்தினராக கைதடி பிரதேச கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.கபில்ராஜும் கலந்துகொண்டனர்.

பாடசாலை மாணவர்கள், ஊரவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகளும் இங்கு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.





# யானை தாக்கி ஒருவர் சாவு!

மின்னேரியா, ரஜஎல – மஹாசென மாவத்தையைச் சேர்ந்த ஒருவர் காட்டு யானை தாக்கியதில் உயிரிழந்துள்ளார் என்று மின்னேரிய பொலிஸார் தெரிவித்தனர்.

லங்காதிலக பண்டார ராஜபக்ஷ வாசல அதபத்து முதியன்செல ராலஹாமிசுனில் பண்டாரநாயக்க என்ற 66 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் நேற்று இரவு சுமார் 10.30 மணியளவில் வீட்டின் பின் பகுதிக்குச் சென்றபோது, யானை தாக்கியதில் பலத்த காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின் உயிரிழந்துள்ளார்.





# வவுனியாவில் ஔவையாரின் நினைவு தினம் அனுஷ்டிப்பு

(கி.வசந்தன்)

ஔவையாரின் நினைவு தினம் வவுனியா, சின்னப்புதுக்குளம், மாமடுவ சந்தியிலுள்ள ஔவை யாரின் சிலையடியில் இன்று இடம் பெற்றது.

இதன்போது ஔவையாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணி வித்து மலரஞ்சலியும் செய்யப்பட் டது.

தமிழ்மணி அகளங்கன் மற்றும் மாணவர்கள் நினைவுப் பேருரைகள் ஆற்றினார்கள்.

வவுனியா நகர சபையின் ஏற்பாட் டில் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் கண்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.










# வவுனியாவில் களைகட்டிய பொங்கல் வியாபாரம்



(கி.வசந்தன்)

உழவர் திருநாளாம் தைப்பொங்கல் தினத்தைக் கொண்டாடுவதற்கு மக்கள் தயாராகி வரும் நிலையில் வவுனியாவில் பொங்கல் வியாபாரம் களைகட்டியுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை உழவர் தினமான தை முதலாம் திகதி பிறக்கவுள்ள நிலையில் தை பிறந்தால் வழிபிறக்கும் என்ற வாக்குக்கிணங்க தைப்பொங்கலை மக்கள் சிறப்பாகக் கொண்டாடவுள்ளனர்.

வவுனியா நகரப் பகுதியில் அதிக சன நெரிசல் காணப்படுவதுடன் பொங்கலுக்குத் தேவையான பானை, அகப்பை, கரும்பு, பட்டாசு, பழவகை என்பவற்றின் விற்பனை சூடுபிடித்துள்ளது.

கடந்த வருடத்தை விட இம்முறை மக்கள் அதிக ஆர்வத்துடன் பொங்கல் பொருட்களைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர் என்று வவுனியா வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### அநுர இன்று...

அநுரகுமார திஸாநாயக்க இன்று மாலை நாட்டிலிருந்து பயணமாகின்றார்

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின் அழைப்பின் பேரில், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நாளை (14) முதல் 17 ஆம் திகதி வரை சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்கின்றார்.

இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மற்றும் சீன பிரதமர் லி கியாங் மற்றும் இராஜதந்திரிகளைச் சந்திக்கவுள்ளார்.

அத்தோடு இந்த விஜயத்தின்போது, தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் வறுமை ஒழிப்பு உள்ளிட்ட துறைசார் பல கள விஜயங்களிலும் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளதோடு பல உயர்மட்ட வர்த்தகக் கூட்டங்களிலும் பங்கேற்கத் திட்டமிடப்பட்டுள்ளார்.

இந்த விஜயத்தின் போது இரு நாடுகளுக்கும் இடையே பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன.

ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பின்னர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேற்கொள்ளும் இரண்டாவது வெளிநாட்டு உத்தியோகபூர்வ விஜயம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில் இந்த விஜயம் மிக முக்கியமான முன்னெடுப்பாகக் கருதப்படுகின்றது. இதன் ஊடாக இரு தரப்பு பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### கடத்தப்பட்ட மாணவி...

இந்நிலையில், இளைஞர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் மாணவியிடம் பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

மேலும்தாயின்தம்பியானதனதுமாமாவின் மகளையே இவ்வாறு அழைத்து வந்ததாக குறித்த கடத்தலை நடத்திய இளைஞர் குறிப்பிட்டுள்ளார்.

தான் இரண்டு வருடங்களுக்கும் மேலாக ஜப்பானில் பணிபுரிந்தார் எனவும், மாமாவிடம் தனது பணம் கொடுக்கப்பட்டது எனவும், பணத்தைத் தராததால் தான் இதுபோன்ற நடவடிக்கை எடுத்தார் எனவும் பொலிஸாரிடம் மேற்படி இளைஞர் விசாரணையின்போது கூறியுள்ளார்.

இதேவேளை, கடத்தப்பட்ட பாடசாலை மாணவி வைத்தியசாலைக்குப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

### புதுக்குடியிருப்பில்...

கிளிநொச்சியைச் சேர்ந்த 14 வயது மாணவி ஒருவர் புதுக்குடியிருப்பு, கோம்பாவில் பகுதியில் மூன்று மாதங்களாகத் தங்கவைக்கப்பட்டு விபச்சாரத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு வந்துள்ளார். பின்னர் அவர் கிளிநொச்சியில் உள்ள தனது வீட்டுக்குச் சென்றுள்ளார்.

மேற்படி மாணவியின் உடலில் ஏற்பட்ட மாற்றத்தை அவதானித்த பெற்றோர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்த்த பின்னர் அவர் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகியிருந்தமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து கிளிநொச்சி வைத்தியசாலை பொலிஸார் பாதிக்கப்பட்ட மாணவியிடம் விசாரணை செய்த போது அவருக்கும் கிளிநொச்சியில் ஒரு பெண்ணுக்கும் பழக்கம் ஏற்பட்டுள்ளது.

பின்னர் அந்தப் பெண் மூலமாக புதுக்குடியிருப்புப் பெண்ணுக்கும் மேற்படி மாணவிக்கும் தொடர்பு ஏற்பட்டுள்ளது.

மாணவிக்குப் பண ஆசையைக் காட்டி அவரைப் புதுக்குடியிருப்பு, கோம்பாவில் பகுதியில் உள்ள பெண் வீட்டுக்கு அழைத்துள்ளனர். அங்கு மூன்று மாதங்கள் மேற்படி மாணவி தங்கியிருந்துள்ளார்.

மாணவியை வைத்து விபச்சாரத் தொழில் செய்து பணத்தை அவருக்குக் கொடுக்க மறுத்ததைத் தொடர்ந்தே அவர் வீட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ளார்.

பின்னர் கிளிநொச்சி பொலிஸாரினால் கிளிநொச்சியில் ஒரு பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து புதுக்குடியிருப்புப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து புதுக்குடியிருப்பு குடும்பப் பெண்ணும் கணவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் புதுகுடியிருப்பு மற்றும் கிளிநொச்சி பொலிஸார் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

### ரணில் - சஜித்...

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கேள்வி – ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைய உள்ளதாகக் கூறப்படுகின்றது. இது தொடர்பில் உங்களுடைய நிலைப்பாடு என்ன?

பதில் – ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைய வேண்டும் என ஒரு தரப்பினர் விரும்புகின்றனர். சிலர் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். எதிர்காலத்தில் கட்சியை மறுசீரமைப்பு செய்து கட்சியின் தலைவர் தனது குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டும்.

அவ்வாறில்லையெனில் ஐக்கிய மக்கள் சக்தியின் பெரும்பாலான உறுப்பினர்கள் கட்சியிலிருந்து விலகி முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்துகொள்வர். ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைய நான் எதிர்பார்க்கவில்லை. தொடர்ந்தும் ஐக்கிய மக்கள் சக்தியிலேயே இருப்பதற்கு எதிர்பார்க்கின்றேன். கட்சியின் தலைவரே இது தொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டும்.

கேள்வி – ஐக்கிய மக்கள் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவதாகக் கூறினால் நீங்கள் இணைந்துகொள்வீர்களா?

பதில் – அது பற்றி சிந்திக்க வேண்டும். அவ்வாறு நடக்கும் என நான் எதிர்பார்க்கவில்லை. ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி எவ்வாறானது என்பதை என்னை விட எமது கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ நன்கறிவார்.

எனவே, சஜித் பிரேமதாஸ கட்சியை மீளக் கட்டியெழுப்ப வேண்டும். அவர் சிறந்த தலைவராகச் செயற்பட வேண்டும்.

எதிர்க்கட்சிக்கு உள்ள பொறுப்புக்களைச் சரிவர நிறைவேற்ற வேண்டும். அவ்வாறு செயற்பட்டால் ரணில் விக்கிரமசிங்கவின் ஒத்துழைப்பு எமக்கு அவசியமில்லை. ஐக்கிய மக்கள் சக்தியிலேயே அதிக நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியில் அவ்வாறில்லை. இந்த இரு கட்சிகளும் ஒன்றிணைய வேண்டிய அவசியமில்லை. இதுவே எனது தனிப்பட்ட கருத்தாகும்.” – என்றார்.



# மிகவும் சுறுசுறுப்பாக இடம்பெறும் குடாநாட்டின் பொங்கல் வியாபாரம்

**(ந.லோகதயாளன், எஸ். நிதர்ஷன்)**





யாழ். குடாநாட்டில் பொங்கல் வியாபாரம் மிகவும் சுறுசுறுப்பாக இடம்பெறுகின்றது.

பொங்கல் பொருள்கள், பானைகள், பழங்கள் என்பவற்றுடன் கரும்பு மட்டுமன்றித் தோரணங்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

யாழ். குடாநாட்டில் காணப்படும் சந்தைகளில் மக்கள் அதிகமாக கூடியதால் வீதிகள் போக்குவரத்து நெரிசல்களுடன் காணப்பட்டன.

இதன் காரணமாக பல வீதிகளில் கனரக வாகனங்கள் பயணிப்பதற்கு தற்காலிக தடை ஏற்படுத்தப்பட்டு வீதிகளிலும் விற்பனை இடம்பெற்றது.

தைப் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் மண்பானை தயாரிப்பு மற்றும் விற்பனை என்பன அமோகமாக இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.







நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மாணவரைக் காப்போம்!

சமீபகாலமாக பாடசாலை மாணவர்களிடையே புகையிலைக்கு அடிமையாகும் பழக்கம் அதிகரித்து வருகின்றது. இது நாட்டின் எதிர்கால சமூகத்தின் நல்வாழ்வையே கேள்விக்குறியாக்கும் நிலைக்குக் கொண்டு செல்கின்றது. வளர்ந்து வரும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டியது மிக அவசரத் தேவை.

- இவ்வாறு மனநல மருத்துவர் ரூமி ரூபன் தெரிவித்துள்ளார்.

பல பள்ளி மாணவர்கள் புகையிலை மற்றும் இ-சிகரெட்டுகளுக்கு அடிமையாகி வருகின்றனர். இது போன்ற பழக்கங்கள் சட்டவிரோத போதைப் பொருள்களுக்கு மேலும் அடிமையாவதற்கு வழிவகுக்கும். இது மாணவர்களிடையே அதிகரிக்க கூடும் என அவர் எச்சரித்துள்ளார்.

இந்தப் பிரச்சினையை உன்னிப்பாகக் கண்காணித்து நிவர்த்தி செய்வது பெற்றோர்கள், அதிபர் மற்றும் ஆசிரியர்களின் பொறுப்பு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உண்மைதான். இந்தப் பிரச்சினையை தனித்து ஆசிரியர்கள் கண்காணித்துக் கட்டுப்படுத்தி விட முடியாது. பாடசாலைச் சமூகம் - அதிபர், ஆசிரியர்கள், சிரேஷ்ட மாணவ முதல்வர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் என முழு சமூகமும் - கூட்டிணைந்து பணியாற்றுவதன் மூலமே இந்தப் பிரச்சினையை ஓரளவுக்கு எதிர்கொண்டு சமாளிக்க முடியும்.

தேவைப்பட்டால் பாடசலைக்குப் புறம்பான டியூஷன் வகுப்புகளின் ஆசிரியர்கள், நிர்வாகிகள், பொலிஸார் போன்ற தரப்பினரையும் ஒன்றிணைத்துச் செயற்பட வேண்டி நேரலாம்.

சமூகத்தைப் பெரிதும் பாதிக்கப் போகின்ற ஒரு பிரச்சினையை எதிர்கொண்டு சமாளிப்பதற்கு சமூகம் ஒன்றிணைவது முக்கியமானதுதான். தவிர்க்க முடியாததுதான்.

"புகைபிடிப்பதால் ஏற்படும் ஆபத்துகள் மற்றும் புகையிலை பயன்பாட்டுடன் தொடர்புடைய உடல்நல அபாயங்கள் மற்றும் பிரச்சினைகள் குறித்து பெற்றோர்கள்தங்கள்பிள்ளைரகளுடன் திறந்த விவாதங்களில் ஈடுபட வேண்டும்" என்றும் மனநல மருத்துவர் ரூமி ரூபன் மேலும் தெரிவிக்கின்றார். அதாவது திறந்த மனதுடன் பிள்ளைகளுடன் கலந்துரையாடுவது பல பிரச்சினைகளுக்கு தீர்வாகும் என்கின்றார் அவர்.

முதலில் புகையிலைக்கு அடிமையாகும் பிள்ளைகள், புகையிலை வாங்கப் பணம் இல்லாதபோது, அவர்கள் தங்கள் பெற்றோரிடமிருந்து பணத்தைத் திருடுவதற்கு முயற்சிப்பார்கள், இது அவர்களை மேலும் பல சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு வழி செய்யும் என்றும் மருத்துவர் ரூமி ரூபன் மேலும் விளக்கியுள்ளார்.

புகையிலையுடன் ஆரம்பிக்கும் பழக்கம் பின்னர் மோசமான போதை வஸ்துப் பாவனை வரை விரைந்து இட்டுச் செல்லும் என்ற அவரின் எச்சரிக்கையும் இலகுவில் புரிந்து கொள்ளத் தக்க சிக்கலே.

பிள்ளைகள் தங்கள் நேரத்தை எங்கு செலவிடுகிறார்கள், யாருடன் பழகுகிறார்கள், தங்கள் நிதியை எவ்வாறு நிர்வகிக்கிறார்கள் என்பதில் பெற்றோர்கள், மூத்த சகோதரர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் மேலும் கூருகின்றமையில் அர்த்தங்கள் அதிகம் உள்ளன.

புகையிலைக்கு அடிமையான சிறுவர்களை தாமதமின்றி மருத்துவ ஆலோசனைக்கு உட்படுத்தப் பெற்றோர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்துவதிலும் கூட அர்த்தங்கள் அதிகம் உள்ளன.

நமது சமூகக் கட்டமைப்பு விழுமியங்களில் - வாழ்க்கை முறைமைகளில் - சமுதாயப் பழக்கவழக்கங்களில் - கூட்டுச் செயற்பாடுகளில் - குடும்ப உறவுகளில் - பாடசாலை கற்பித்தல் பாங்குகளில் - ஆசிரிய, மாணவ உறவுகளில் - ஏற்பட்டுள்ள தளர்வு நிலையும் இந்த விவகாரம் சீர்கெட்டுப் போவதற்கான காரணங்களாக அமைகின்றன என்பதும் கண்கூடு.





# வவுனியா அறநெறிப் பாடசாலை மாணவருக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் பொங்கல் பொதிகள்

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் வவுனியாவில் உள்ள மூன்று அறநெறிப் பாடசாலைகளைச் சேர்ந்த சிறார் களின் 130 குடும்பங்களுக்கு 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொங்கல் பொதிகளை நேற்று (12) ஞாயிற்றுக்கிழமை வழங்கியது.

வவுனியா, கணேசபுரம் திருமூலர் அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் 45 குடும்பங்களுக்கும், வவுனியா, கணேசபுரம் ஸ்ரீ சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் 42 குடும்பங்களுக்கும், கோயில்புளியங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவர்களின் 43 குடும்பங்களுக்கும் ஒவ்வொரு பொதியும் 2500 ரூபா பெறுமதியில் வழங்கப்பட்டன.

ஆச்சிரம முதல்வர் அமுதகலாசுரபி கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று இவற்றை வழங்கி வைத்தார்.









# யாழ். பல்கலை மாணவர் முன்னெடுத்த திருவெம்பாவைப் பாராயணம் நிறைவு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் கடந்த 4 ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்டு வந்த திருவெம்பாவைப் பாராயணம் இன்று (13) மாணிக்கவாசகர் திருவீதியுலாவுடன் நிறைவு பெற்றது.

இன்று (13) அதிகாலை 3 மணியளவில் பரமேஸ்வரா ஆலயத்தில் இருந்து ஆரம்பித்த மாணிக்கவாசகர் திருவீதியுலா கலட்டிச் சந்தி ஊடாக யாழ். பல்கலைக்கழக பாலசிங்கம் விடுதியைக் கடந்து யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம் ஊடாக திருநெல்வேலிச் சந்தியை அடைந்து அங்கிருந்து பரமேஸ்வராச் சந்தியை அடைந்து தொடர்ந்து திருநெல்வேலி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் வழிபாடுகளை தொடர்ந்து மீண்டும் யாழ். பல்கலைக் கழகத்தை வந்தடைந்தது. இதன் பொழுது வீதியில் காணப்பட்ட ஆலயங்களில் விசேட வழிபாடுகள் இடம்பெற்று பிரசாதங்களும் வழங்கப்பட்டன.

இந்தப் பாராயணத்தில் யாழ். இந்து மன்ற பெரும் பொருளாளரும் சிரேஸ்ட விரிவுரையாளருமான சி.ரமணராஜா, விஞ்ஞான பீட பேராசிரியர் ஐங்கரன் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

திருவெம்பாவை விரத நாளை முன்னிட்டு கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் ஆரம்பிக்கபட்ட மார்கழி விழாவும் சிறப்புற இடம்பெறவுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் திருவெம்பாவை பாராயணம் ஆரம்பிக் கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.






# இணுவில் பொது நூலகத்தின் சிறுவர் திறன்விருத்தி மைய கலை விழா!

(எஸ்.நிதர்ஷன்)

இணுவில் பொது நூலகத்தின் சிறுவர் திறன்விருத்தி மைய மாணவர்களின் கலை விழா நேற்று (12) ஞாயிற்றுக்கிழமை இணுவில் பொது நூலக மண்டபத்தில், தலைவர் ம.கஜந்த ரூபன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக மாகாண கல்வித் திணைக்களத்தின் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி பிரிவு பணிப்பாளர் த.முகுந்தனும், சிறப்பு விருந்தினர்களாக டிப்ளோமா கற்கை நெறிகள் தொழில்நுட்பவியல் கல்லூரியின் பகுதித் தலைவர் பொ.ஜெனார்த்தனனும், மென் பொறியாளர் இராகவனும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் மாணவர்கள் கௌரவிப்பும் இடம் பெற்றது.






# ரஹ்மத் பவுண்டேசன் ஏற்பாட்டில் பொதுக் கிணறு அமைத்து வழங்கல்





(செயிட் ஆஷிப்)

நிந்தவூர், அட்டப்பள்ளம் பிரதேசத்தில் அமைந்துள்ள பஹ்ரு மாதிரிக் கிராமத்தில் வசிக்கும் மக்களின் நலன் கருதி வை.டபிள்யூ.எம்.ஏ. பேரவையின் ஒருங்கிணைப்பில் கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் பொதுக் கிணறு ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளது.

பவுண்டேசன் ஸ்தாபகரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொருளாளரும் கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூர் இதனைச் சம்பிரதாய பூர்வமாகக் கையளித்தார்.

இந்தக் கிராமத்தில் வசித்துவரும் 32 குடும்பங்களின் அவசியத் தேவை கருதி விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று குறுகிய நாள்களுக்குள் இந்தப் பொதுக் கிணறை அமைத்துக் கொடுத்துள்ளனர். இதற்கு மக்கள் நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இங்கு அமைந்துள்ள பள்ளிவாசலின் அபிவிருத்தி மற்றும் பிரதேச மக்களின் தேவைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன் மகஜர் ஒன்றும் ரஹ்மத் மன்சூரிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பள்ளிவாசல் பேஷ் இமாம் உட்பட பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998







# 31 மில்லியன் ரூபா செலவில் சம்மாந்துறையில் சிறுவர் பூங்கா!

**(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ் )**

சிறுவர்களின் உள வளத்தை செழிப்புறச் செய்வதற்கும் பொழுதுபோக்கு மேம்பாட்டுக்காகவும் சம்மாந்துறை பிரதேச சபையால் சுமார் 31 மில்லியன் ரூபா செலவில் ஆழையடி பொதுச் சந்தையில் அமைக்கப்பட்ட சிறுவர் பொழுது போக்கு பூங்கா சிறுவர்களின் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை பிரதேச சபைச் செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். எல்.ஏ.கமல் நெத்மினி பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

அம்பாறை மாவட்டத்தில் முதல் முறையாக மூடிய அரங்கில் அமையப் பெற்ற இப்பூங்காவில் புகையிரதம் மற்றும் கார் சவாரி உள்வாங்க பெற்றிருப்பது சிறப்பம்சமாகும்.

இந்தத் திட்டத்துக்கு உலக வங்கி நிதி ஒதுக்கீட்டின் கீழ் உள்ளூர் அபிவிருத்திச் செயல் திட்டத்தில் 31 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் போது பசுமை பூங்காவாக மிளிரச் செய்யும் வகையில் அதிதிகளால் மர நடுகையும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தரும் சட்டத்தரணியுமான றிஸாட் எம். புஹாரி, கட்டடத் திணைக்களத்தின் கல்முனை பிராந்திய பிரதம பொறியாளர் பி. அச்சுதன், சம்மாந்துறை பெரிய பள்ளிவாசல் தலைவரும் முன்னாள் அரசாங்க அதிபருமான ஐ.எம் ஹனிபா, மஜிலிஸ் அஸ்ஸுரா நிர்வாக செயலாளர் எம். எல்.எச். ஜௌபர், ஆய்வு உத்தியோகத்தர், சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.





# மின்சாரம் தாக்கி ஒருவர் சம்மாந்துறையில் சாவு!

**(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ் )**

வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த போதே மின்சாரம் தாக்கி ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று திங்கட்கிழமை (13) நடைபெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சென்னக் கிராமம் பகுதியில் வீட்டு வேலை செய்துகொண்டிருந்த போது மின்சாரம் தாக்கி மலையடிக் கிராமம் 03 பகுதியைச் சேர்ந்த (வயது 60) நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மரணமடைந்தவரின் சடலம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# போயா தினத்தில் சட்ட விரோதமாக மதுபானம் விற்பனை செய்தவர் கைது!

(எஸ். நிதர்ஷன்)

போயா தினத்தில் சட்ட விரோதமாக மதுபானம் விற்பனை செய்த இடம் ஒன்று யாழ்ப்பாணத்தில் முற்றுகையிடப்பட்டது. சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், கச்சேரி கிழக்குப் பகுதியில் இன்று (13) காலை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

போயா தினமான இன்று மதுபானம் விற்பனை செய்யப்படுகிறது என்று யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் இயங்கும் யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு இரகசிய தகவலொன்று கிடைத்துள்ளது.

இதற்கமைய புலனாய்வு பிரிவினரும் யாழ். மாவட்ட போதை ஒழிப்பு பிரிவும் இணைந்து அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தியுள்ளனர்.

இதன்போது போயா தினத்தில் மதுபானம் விற்பனை செய்த இடம் முற்றுகை இடப்பட்டு அங்கிருந்த பெருமளவான மதுபானம் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகத்தில் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட மதுபானம் சந்தேக நபருடன் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாண பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த விசாரணைகளின் பின்னர் சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.







# கட்டாக்காலி மாடுகளால் அழிக்கப்படும் நெற்பயிர்!

(த.சுபேசன்)

கைதடி கமநலசேவை நிலையத்துக்கு உட்பட்ட தனங்களப்பு கேரதீவு வயல்வெளிப் பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளால் தொடர்ச்சியாக நெற் பயிர்கள் அழிக்கப்பட்டு வருகின்றன என்று பாதிக்கப்பட்ட விவசாயிகள் தென்மராட்சிப் பிரதேச செயலரிடம் நேரடியாகச் சென்று முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

தனங்களப்பு பகுதியில் உள்ள அரச காணியில் மாடுகளைப் பட்டி அடைத்து வளர்ப்பவர்கள் பகல் வேளைகளில் மாடுகளைப் பட்டி அவிழ்த்து விடுவதால் அவை அருகில் உள்ள நெற் பயிர்களை தொடர்ச்சியாக அழித்து வருகின்றன.

இந்த நிலையில் அண்மையில் இவ்வாறு வயல் நிலங்களில் பயிர்களை அழித்த சுமார் 40 மாடுகளை வயல் உரிமையாளர்கள் பிடித்துக் கட்டி வைத்து விட்டு உரிய திணைக்களங்களுக்கு தகவல் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த மாடுகள் இரவோடு இரவாக அங்கிருந்து இனந்தெரியாதோரால் அவிழ்த்துச் செல்லப்பட்டுள்ளன.

அதன் பின்னரும் மீண்டும் பயிர்களை அழிக்கும் விதமாக மாடுகள் அவிழ்த்து விடப்பட்டுள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.



# மேல்மருவத்தூர் சித்தர் பீடத்தால் பொங்கல் பொதி வழங்கி வைப்பு

(எஸ். நிதர்ஷன்)

தமிழர் திருநாள் தைப்பொங்கலை முன்னிட்டு மேல்மருவத்தூர் சக்தி பீடத்தால் பொங்கல் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இலங்கை மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர் பீடத்தின் கல்வி, சமூகநலம், பண்பாடு அறப்பணி மையத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் கலாசார மண்டபத்தில் நேற்று (12) இடம்பெற்றது.

இதன்போது 108 குடும்பங்களுக்கு பொங்கல் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகர பிள்ளையார் ஆலய அறங்காவல் குழுத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் பொங்கல் பொதியை மேல்மருவத்தூர் சக்தி பீடத்தினருக்கு வழங்கி பொங்கல் பொதி வழங்கும் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

அதனை தொடர்ந்து நல்லூர் வடக்கு சந்திரசேகர பிள்ளையார் ஆலய அறங்காவல் குழு உறுப்பினர்கள் மற்றும் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சக்தி பீடத்தினர் உள்ளிட்டவர்கள் மக்களுக்கு பொங்கல்பொதிகளை வழங்கிவைத்தனர்.





# மன்னாரில் பொங்கலுக்கு தயாராகிவரும் மக்கள்!

(மன்னார எஸ்.ஆர்.லெம்பேட்)

தமிழர்கள் நாளை செவ்வாய்க் கிழமை (14) தைப் பொங்கலை கொண்டாட உள்ள நிலையில் மன்னார் மாவட்டத்திலும் பொங்கல் கொண்டாட்டங்களுக்கான பொருள் கொள்வனவில் மக்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

நாளை (14) பொங்கல் கொண்டாட்டங்களை மேற்கொள்வதற்கான உணவு பொருள்கள், பானை, கரும்பு உள்ளடங்கலான பொருள்களை மக்கள் ஆர்வத்துடன் கொள்வனவு செய்வதை நகர் பகுதியில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

கடந்த சில தினங்களாக மன்னார் மாவட்டத்தில் சீரற்ற காலநிலை நிலவி வருகின்ற போதிலும் மக்கள் தை திருநாளை கொண்டாடுவதற்கு தயாராகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# மல்வத்தையில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட சந்தேகத்தில் ஒருவர் கைது!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)



வீட்டில் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்து கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்தோடு விற்பனைக்காக இருந்த கசிப்பையும் சம்மாந்துறை பொலிஸ் நிலைய ஊழல் தடுப்பு பிரிவினர் மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் இன்று (13) திங்கட் கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மல்வத்தை, திருவள்ளுவர்புரம் பகுதியில் இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

சம்மாந்துறை ஊழல் தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கையின் போது 45 வயதுடைய சந்தேக நபர் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடமிருந்து 15000 மில்லி லீட்டர் கசிப்பு மீட்கப்பட்டது. சந்தேக நபர் சான்றுப் பொருள்களுடன் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், இந்தச் சோதனை நடவடிக்கையானது சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம். நௌபரின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய ஊழல் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஆர்.எம்.ரணதுங்க தலைமையில் பொலிஸ் உத்தியோகத்தர்களான சார்ஜன் அநுர, சார்ஜன் வி.டபிள்யூ. அசோக்க, சார்ஜன் டபிள்யூ.ஏ. சரத், சார்ஜன் விஜேரத்ன உள்ளிட்ட அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# திருவெம்பாவை இறுதி நாள் நிகழ்வு இன்று பாலையடியில்

(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு இந்து சமய விருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் வருடாந்தம் இடம்பெற்றுவரும் திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை ஊர்வலத்தின் இறுதி நாளாகிய இன்று (13) காரைதீவு பாலையடி வால விக்னேஸ்வரர் ஆலயத்தில் திருவெம்பாவை பாடும் நிகழ்வு நிறைவு பெற்றது.

அங்கு தேர் உலாவுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வாகன உரிமையாளர்கள், சாரதிகள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு விசேட பரிசு வழங்கி அவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

ஆலயங்களின் பத்து தேர்கள் கலந்து கொண்ட திருவாதிரை ஊர் வலமும் இடம் பெற்றது.





# போயா தினத்தில் தர்ம போதனை நிகழ்வு!







2025 ஆம் ஆண்டின் முதலாவது துருது போயா தினத்தை முன்னிட்டு கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று (13) தர்ம போதனை நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இரத்மலானை பரதம்மசைத்திய பிரிவேனா விகாராதிபதியும், ஸ்ரீ கல்யாணி சாமகிரி தம்ம மகா சங்கத்தின் பிரதி பதிவாளரும், உலக பௌத்த சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளருமான சங்கைக்குரிய கலாநிதி மாஇடிபே விமலசார இந்த தர்ம போதனையை நிகழ்த்தினார்.



# அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி திருமலையில் கையெழுத்துப் போராட்டம்

(ஹஸ்பர் ஏ.எச்.)

பலவருடங்களாக விசாரணை என்னும் பெயரில் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரிய கையெழுத்து போராட்டம் திருகோணமலை சிவன் கோயிலடிக்கு முன்னால் இன்று (13) இடம் பெற்றது

குறித்த கையெழுத்து வேட்டையானது போராளிகள் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இதில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டு கையெழுத்துக்களை இட்டனர். குறித்த கையெழுத்துப் போராட்டமானது வடக்குக் கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட பல மாவட்டங்களிலும் இடம் பெறவுள்ளதாக ஏற்பாட்டு குழுவினர் தெரிவித்தனர்.

இதன் போது கருத்து தெரிவித்த இராவண சேனா அமைப்பின் தலைவர் கு.செந்தூரன்,

அரசியல் கைதிகள் பல வருட காலமாக சிறையில் தடுத்து வைக்கப் பட்டுள்ளார்கள். இவர்கள் விசாரணைகள் ஊடாக பலரும் விடுவிக்கப்பட்டு மீண்டும் கைதிகளாக தடுத்து வைக் கப்பட்டுள்ளனர். இவர்களைப் புதிய அரசு விடுதலை செய்ய வேண்டும். தமிழ் மக்களின் குரலைக் கேட்டு அரசு செவிசாய்த்து உடனடியாக விடுதலை செய்யக் கோரியே இந்தக் கையெழுத்து போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம் என்றார்.

ஐந்து ஆண்டுகள் தொடக்கம் முப்பது ஆண்டுகள்வரை தடுத்து வைக்கப் பட்டுள்ள அரசியல் கைதிகளை மற்றும் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை இந்த அரசு சுதந்திர தினத்தன்றாவது விடுதலை செய்ய வேண்டும்.

ஜனாதிபதி யாழ். மண்ணில் வைத்து தேர்தலின் போது வாக்குறுதி அளித்ததை போன்று பொது மன்னிப்பு அடிப் படையில் விடுதலை செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி மற்றும் நீதி அமைச்சர் ஆகியோரிடத்தில் கேட்டு கொள்கின்றோம்.

இந்தக் கோரிக்கையை சட்டமா அதிபர், நீதியமைச்சர், ஜனாதிபதி ஆகியோரிடம் கையளிக்கவுள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.





# மறவன்புலோவில் நெல் அறுவடை விழா; வடமாகாண ஆளுநர் ஆரம்பித்து வைப்பு!

(த.சுபேசன்)

தென்மராட்சி, மறவன்புலோ கமக்கார அமைப்பினரின் ஏற்பாட்டில் இன்று திங்கட்கிழமை நெல் அறுவடை விழா மற்றும் மூத்த கமக்காரர் கௌரவிப்பு நிகழ்வும் மறவன்புலோ சகல கலாவல்லி வித்தியாலயத்தில் இடம் பெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் திருமதி தெய்வநாயகி மற்றும் வடமாகாண விவசாய பணிப்பாளர் திருமதி சுகந்தினி ஆகியோரும், கௌரவ விருந்தினராக கைதடி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.கபில்ராஜூம் கலந்து கொண்டனர்.

இதன்போது சகலகலாவல்லி வித்தியாலயத்துக்கு முன்பாக உள்ள வயலில் சம்பிரதாய முறைப்படி விருந்தினர்களால் அரிவு வெட்டி நெற் கதிர்கள் எடுக்கப்பட்டு அறுவடை விழா ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சகல கலாவல்லி வித்தியாலயத்தில் மாணவர்களுடைய கலை கலாசார நிகழ்வுகள் மற்றும் மறவன்புலோ பகுதியில் விவசாய நடவடிக்கையில் ஈடுபடுகின்ற மூத்த விவசாயிகள் கௌரவிப்பு ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றன.











# மகா கும்பமேளா இன்று ஆரம்பம்





இந்துக்களின் முக்கிய திருவிழாக்களில் மகா கும்பமேளாவும் ஒன்றாகும். 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாடப்படும் கும்பமேளா நிகழ்வானது இந்தியாவில் இன்று ஆரம்பமாகியது .

உத்தரப் பிரதேச மாநிலமான பிரயாக்ராஜ், உத்தரகாண்ட் மாநிலமான அரித்வார், மத்தியப் பிரதேச மாநிலமான உஜ்ஜைன் மற்றும் மகாராஷ்டிர மாநிலமான நாசிக் ஆகிய 4 பிரதேசங்களில் உள்ள ஆற்றங்கரையில் இத்திருவிழா கொண்டாடப்படுகிறது.

அவற்றில், பிரயாக்ராஜ் மாநிலத்தில் நடைபெறும் கும்பமேளாவே மிகவும் புகழ்பெற்றதாக விளங்குகிறது .

கங்கை, யமுனை மற்றும் சரஸ்வதி ஆகிய 3 நதிகள் சங்கமிக்கும் இடத்தில் நடைபெறுவதால் இந்நிகழ்வு மிகவும் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. 3 நதிகளும் சங்கமிக்கும் இடத்தை திரிவேணி சங்கமம் என்று அழைக் கிறார்கள்.

கும்பமேளா நடைபெறும் காலங்களில் திரிவேணி சங்கமத்தில் நீராடுவதை இந்துக்கள் மிகவும் புனிதமாகக் கருதுகிறார்கள்.

இதனைத் தொடர்ந்து பக்தர்கள் மிகப்பெரிய அளவில் திரண்டு புனித நீராடி வருகிறார்கள்.

இந்த மகா கும்பமேளா நிகழ்வுகள் தொடர்ந்தும் 45 நாள்கள் கொண்டாடப் படும் என்பது குறிப்பிடத்தக்கது .




## டுபாய் கார் ரேஸில் சாதித்த அஜித்துக்கு ரஜினி வாழ்த்து

டுபாய் கார் ரேஸில் சாதித்த நடிகர் அஜித்துக்கு, நடிகர் ரஜினிகாந்த் வாழ்த்தும் பாராட்டும் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

"எனது அன்பான அஜித்துக்கு வாழ்த்துகள். நீங்கள் சாதித்து விட்டீர்கள். கடவுள் உங்களை ஆசிர்வதிப்பாராக. லவ் யூ." என பதிவிட்டுள்ளார்.

# எச்.எம்.பி.வி. தொற்றால் மேலும் ஒரு சிறுமி பாதிப்பு

சீனாவில் பரவிவரும் எச்.எம்.பி.வி. வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள சிறுமியொருவர் இந்தியாவின் புதுச்சேரி பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ளார் .

தமிழ்நாடு - புதுச்சேரியில் ஜிப்மர் வைத்தியசாலையில் கடும் காய்ச்சல், சளி, இருமலுடன் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட 5 வயது சிறுமிக்கும் எச்.எம்.பி.வி. வைரஸ் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சிறுமியின் இரத்த மாதிரிகளை பரிசோதனை செய்ததில் அச்சிறுமிக்கு எச்.எம்.பி.வி.வைரஸ் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை, பாதிக்கப்பட்ட சிறுமிக்கு தொடர்ந்தும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும், இந்த வைரஸ் தொடர்பாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் புதுச்சேரி சுகாதாரத்துறை பணிப்பாளர் ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.



# லொஸ் ஏஞ்சலிஸில் பரவிவரும் காட்டுத்தீயினால் பலியானோரின் எண்ணிக்கை 24 ஆக அதிகரிப்பு





அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சலிஸில் பரவிவரும் காட்டுத்தீயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 24 ஆக உயர்ந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மணித்தியாலத்துக்கு சுமார் 96 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசுவதால், தற்போதைய காட்டுத் தீப்பரவல் நிலைமை எதிர்வரும் நாட்களில் மேலும் பரவக்கூடிய அபாயம் உள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

காட்டுத்தீப்பரவல் காரணமாக பெலிசேட்ஸ் பகுதியில் 23,000 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பு அழிவடைந்துள்ளதுடன், ஈடன் பகுதியில் 14,000 ஏக்கருக்கும் அதிகமான நிலங்கள் காட்டுத்தீ காரணமாக அழிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க தீயணைப்பு குழுக்கள், காட்டுத்தீ பரவுவதைத் தடுப்பதற்கான முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஒரு வாரமாகியும் காட்டுத் தீயை கட்டுப்படுத்த முடியவில்லை. இது குறித்து லொஸ் ஏஞ்சல்ஸ் அதிகாரிகள் வட்டாரங்கள் கூறுகையில்,

“லொஸ் ஏஞ்சல்ஸ் நகரம் மலை சார்ந்த பகுதியாகும். இந்த மலைப் பகுதிகளில் வீடுகள் இல்லாத நடோடிகள் பலர் வசிக்கின்றனர். தற்போது குளிர் காலம் என்பதால் அவர்களில் யாராவது வெப்பத்துக்காக தீமூட்டி இருக்கலாம். அந்த தீ காட்டுத் தீயாக பரவியிருக்கலாம் என்று சந்தேகிக்கிறோம்.

லொஸ் ஏஞ்சல்ஸ் வனப் பகுதியில் புதைவடமாகவும் உயர் கோபுரங்கள் மூலமும் உயர்அழுத்த மின்சார கம்பிகள் அமைக்கப்பட்டு உள்ளன. இதில் மின் கசிவு ஏற்பட்டு காட்டுத் தீயாக உருவாகி இருக்கலாம் என்றும் சந்தேகிக்கிறோம். கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் லொஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் போதிய மழைப்பொழிவு இல்லை. இதனால் பைன் மரங்கள், செடி, கொடிகள் பட்டுப் போயிருந்தன. இது காட்டுத் தீ அதிவேகமாக பரவியதற்கு முக்கிய காரணம் ஆகும்.

சுமார் 200 மைல் தொலைவில் கிரேட் பேசின் பாலைவனம் அமைந்துள்ளது. அங்கிருந்து வரும் வறண்ட காற்று தற்போது லொஸ் ஏஞ்சல்ஸ் நகரை கடந்து செல்கிறது. இந்த காற்று வழக்கத்தைவிட அதிவேகமாக சுமார் 80 கி.மீ. வேகத்தில் வீசுகிறது. இதுவும் காட்டுத் தீ வியாபித்து பரவியதற்கு முக்கிய காரணமாகும்.

காட்டுத் தீயை அணைக்க கனடா, மெக்சிகோ நாடுகள் உதவிக் கரம் நீட்டி உள்ளன. அமெரிக்க அரசின் ஒட்டுமொத்த கவனமும் லாஸ் ஏஞ்சல்ஸ் மீது திரும்பியிருக்கிறது. இதன் காரணமாக தீயை கட்டுப்படுத்துவதில் ஓரளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது.

திடீர் மழை பெய்ய வேண்டும். காற்றின் வேகம் குறைய வேண்டும். அப்போதுதான் தீயை கட்டுப்படுத்த முடியும். இப்போதைய நிலையில் காற்றின் வேகம் குறைய வாய்ப்பில்லை என்று வானிலை மையம் கூறியிருக்கிறது. இயற்கை ஒத்துழைப்பு அளித்தால் தீயை விரைவாக அணைப்போம்.” என்று அதிகாரிகள் மற்றும் தீயணைப்புத் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



# ஜோ பைடனுடன் தொலைபேசியில் உரையாடினார் இஸ்ரேல் பிரதமர்

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கும் இடையில் தொலைபேசி உரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

பதவியிலிருந்து விலகுவதற்கு முன்பு, காசா பகுதியில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவது மற்றும் பணயக்கைதிகளை விடுவிப்பது குறித்து ஜோ பைடன் கலந்துரையாடியுள்ளார் என வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. அமெரிக்க ஜனாதிபதி, இஸ்ரேலுக்கு அளித்த ஆதரவுக்கு பெஞ்சமின் நெதன்யாகு இதன்போது நன்றி தெரிவித்துள்ளார்.

கனடா முரசு

பக்கங்கள் 03

திங்கட்கிழமை 13/01/2025

## மருத்துவர்களுக்கு தீவிர பற்றாக்குறை

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் குடும்ப நல மருத்துவர் பற்றாக்குறை நிலைமை தீவிரம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டில் 02




# கனடாவில் மூலதன ஆதாய வரி அறவிடும் நடவடிக்கை தொடரும்

**கனடாவில் மூலதன ஆதாய வரி அறவீடு நடவடிக்கைகள் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.**

**கனடாவின் பிரதமர் நாடாளுமன்றை ஒத்தி வைத்துள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.**

**கனடிய வருமான முகவர் நிறுவனம் இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளது. இதன்படி நாடாளுமன்ற அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டாலும் மூலதன ஆதாயவரி தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.**

கடந்த ஆண்டில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான லிபரல் அரசாங்கம் இந்த மூலதன ஆதாய வரி நடைமுறையை அறிமுகம் செய்திருந்தது.

இதன்படி வருமான வரி திரட்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என கனடிய வருமான முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இரண்டரை லட்சம் டொலர்களுக்கு மேல் மூலதன ஆதாய வருமானத்தை ஈட்டுபவர்கள் இந்த வரி விதிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே இந்த வரி அறவீட்டு நடைமுறை அமுலில் இருக்கும் என கனடிய நிதி திணைக்களம் தெரிவித்துள்ளது.

# உலகின் சக்தி வாய்ந்த கடவுச்சீட்டுகள் வரிசையில் கனடாவிற்கு ஏழாம் இடம்

உலகின் சக்தி வாய்ந்த கடவுச்சீட்டுகளை கொண்ட நாடுகளின் வரிசையில் கனடாவிற்கு ஏழாம் இடம் கிடைக்க பெற்றுள்ளது. 2025 ஆம் ஆண்டுக்கான ஹென்லி கடவுச்சீட்டு சுட்டென் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த பட்டியலில் உலகில் சக்தி வாய்ந்த கடவு சீட்டைக் கொண்ட நாடாக சிங்கப்பூர் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

உலகின் பலம் பொருந்திய கடவுச்சீட்டு கொண்ட நாடுகள் வரிசையில் கனடா பின்னடைவை சந்தித்துள்ளது.

கடந்த ஒரு தசாப்த கால இடையில் உலகின் பலம் பொருந்திய கடவுச்சீட்டை வரிசையில் 02







# அமெரிக்காவிற்கு உதவியது கனடா!







அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஏற்பட்டுள்ள பாரிய காட்டுத்தீயை அணைக்க அமெரிக்க தீயணைப்பு துறை கடுமையாக போராடி வரும் நிலையில், கனடா இந்த இடர்பாடான நேரத்தில் உதவி இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவின் 51 ஆவது மாகாணமாக கனடாவை இணைக்க வேண்டும் என்று ட்ரம்ப் தெரிவித்து வரும் நிலையில், அதற்கு வாய்ப்பே இல்லை என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பதிலடி கொடுத்திருந்தார். இந்த நிலையில் தொழிலதிபரான எலோன் மஸ்க் ட்ரூடோவை பெண் என விழித்திருந்தார்.

இவ்வாறு அமெரிக்கா மற்றும் கனடா இடையே மோதல் போக்கு ஏற்பட்டிருந்தாலும், அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் பரவிய பயங்கரக் காட்டுத்தீ காரணமாக லட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இதுவரை 16 பேர் உயிரிழந்துள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில், காட்டுத்தீயை அணைக்க அமெரிக்க தீயணைப்பு படையினர் போராடி வரும் நிலையில், தீயை அணைக்கும் பணியில் கனடா அரசுக்கு சொந்தமான விமானங்கள் அனுப்பப்பட்டன என பிரதமர் ட்ரூடோ தனது சமூக வலைதளத்தில் பதிவு செய்துள்ளார்.

கலிபோர்னியாவின் தெற்கு பகுதிகளில் ஏற்பட்டுள்ள தீயை அணைக்க, கனடா முயற்சி செய்து வருவதுடன், 250 விமானங்கள் ஏற்கனவே தீயை அணைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளன என்றும், இது எங்கள் அண்டை நாட்டை காப்பாற்ற உதவும் நடவடிக்கை எனவும் ட்ரூடோ தனது சமூக வலைதள பக்கத்தில் தெரிவித்துள்ளார்.





## உலகின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனடிய கடவுச்சீட்டு நான்காம் இடத்தை வகித்து வந்தது.

எனினும் தற்பொழுது மூன்று இடங்கள் பின் தள்ளப்பட்டு ஏழாம் இடத்தினை வகிக்கின்றது. கனடாவுடன், மால்டா மற்றும் போலந்து ஆகியநாடுகளும் ஏழாம் இடத்தை வகிக்கின்றன.

கனடிய கடவுச்சீட்டைப் பயன்படுத்தி உலகில் 188 இடங்களுக்கு விசா இன்றி பயணம் செய்ய முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த தர வரிசையில் சிங்கப்பூர் முதல் இடத்தையும், ஜப்பான் இரண்டாம் இடத்தையும், பின்லாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி தென்கொரியா, ஸ்பெயின் ஆகிய நாடுகள் மூன்றாம் இடத்தையும், ஆஸ்திரியா நான்காவது இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மருத்துவர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடும்ப நல மருத்துவர்கள் இன்றி பாதிக்கப்பட்ட கனடியர்களின் மொத்த எண்ணிக்கை 2.5 மில்லியன் என தெரிவிக்கப்படுகிறது.

2026 ஆம் ஆண்டு அளவில் 4.4 வீதமான ஒன்றாரியோ மக்கள் குடும்ப மருத்துவர் வசதி இல்லாமல் அசௌகரியங்களை எதிர் நோக்க நேரிடும் என தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் சில ஆண்டுகளில் பெரும் எண்ணிக்கையிலான மருத்துவர்கள் ஓய்வு பெற்றுக் கொள்ள திட்டமிட்டுள்ளனர்.

இதனால், குடும்ப நல மருத்துவர்களின் எண்ணிக்கையில் பற்றாக்குறை ஏற்படும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாகவே குடும்ப நல மருத்துவர் எண்ணிக்கையில் பற்றாக்குறை நிலை நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# திடீரென பணியாளர்களை பணி நீக்கம் செய்த நிறுவனம்




கனடாவை மையமாக கொண்டு இயங்கி வரும் பால் பான உற்பத்தி நிறுவனம் ஒன்று திடீரென பணியாளர்களை பணி நீக்கம் செய்துள்ளது.

சுமார் 150 பணியாளர்கள் இவ்வாறு பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பணி நீக்கம் செய்யப்பட்டதனால் சில தமிழர்கள் உள்ளிட்ட பல்வேறு குடியேறிகள் தொழில்களை இழக்க நேரிட்டுள்ளது.

நிறுவனத்தின் தீர்மானத்திற்கு எதிர்ப்பை வெளியிட்டு பணியாளர்கள் போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

ஜொரிகி பிவரெஜேஸ் என்ற நிறுவனம் கனடா மற்றும் அமெரிக்காவில் இயங்கி வருகின்றது. இவ்வாறு இயங்கி வரும் நிறுவனத்தின் பணியாளர்களே பணி நீக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிறுவனத்தின் பால் பான உற்பத்திகளை அருந்திய மூன்று பேர் உயிரிழந்ததுடன் பலர் நோய்வாய்ப்பட்டிருந்தனர். இந்த சம்பவங்களை தொடர்ந்து பிக்கரிங்கில் அமைந்துள்ள இந்த நிறுவனத்தின் உற்பத்தி சாலை மூடப்பப்பட்டது.

இந்த நிறுவனம் பணியாளர்களுக்கான சம்பளம், ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான கடன்களுமாக சுமார் 200 மில்லியன் டாலர் செலுத்த வேண்டி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்த நிறுவனத்தில் நான்கு ஆண்டுகளாக பணிபு பணிபுரிந்து வந்த தாம், திடீரென எடுக்கப்பட்ட தீர்மானத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாக, இங்கு பணிபுரியும் ராஜேந்திரம் ஆறுமுகம் என்பவர் தெரிவிக்கின்றார்.



# கனடாவில் பள்ளிக்கூட சபைகளின் கணனி கட்டமைப்பு மீது சைபர் தாக்குதல்

கனடாவில் பள்ளிக்கூட சபைகளின் கணனி கட்டமைப்பு மீது சைபர் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ரொறன்ரோ பெரும்பாக பகுதியின் பல்வேறு பள்ளிக்கூட சபைகள் மீது இவ்வாறு சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பள்ளிக்கூட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் தகவல் சேகரிப்பு கட்டமைப்புகள் ஊடுருவப்பட்டு இருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் இந்த சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எவ்வாறான தகவல்கள் ஊடுருவப்பட்டன என்பது பற்றிய முழுமையான விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

எவ்வாறெனினும், பாதுகாப்பு பிரிவினர் இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.